# 4 கால்டெக்ஸ் பெட்ரோல் நிலையங்களில் வாகன மின்னூட்டு வசதிகள்




கால்டெக்ஸ் பெட்ரோல் நிலையங்களை நிர்வகிக்கும் ‘செவ்ரோன் சிங்கப்பூர்’ நிறுவனம், ‘சிங்கப்பூர் பவர்’ (எஸ்பி) நிறுவனத்துடன் இணைந்து வாகன மின்னூட்டு வசதிகளை ஏற்படுத்தவுள்ளது.

ஷெல் நிறுவனம் 20 மாதங்களுக்கு முன் தனது பெட்ரோல் நிலையங்களில் வாகன மின்னூட்டு வசதிகளை ஏற்படுத்தியது.

அதன் பிறகு தீவின் வடக்கில் சொங் பாங், கிழக்கில் சாங்கி, மேற்கில் ஜூரோங் ஸ்பிரிங், மத்திய பகுதியில் டன்னர்ன் ஆகிய தனது நான்கு நிலையங்களில் மின்னூட்டு வசதிகளை ஏற்படுத்தப் போவதாக கால்டெக்ஸ் கூறிள்ளது.

சாங்கி நிலையத்தில் இரண்டு மின்னூட்டுக் கூடங்கள் இருக்கும். அங்கு ஒரு வாகனத்துக்கு 100 கிலோவாட் மின்சாரம் ஏற்ற முடியும். மற்ற மூன்று நிலையங்களில் 50 கிலோவாட் மின்சாரத்தை ஏற்றக்கூடிய மின்னூட்டுக் கூடங்கள் அமைக்கப்படும். அதன் மூலம் ஒரு வாகனத்துக்கு 30 நிமிடங்களில் மின்னூட்டம் செய்துவிடலாம்.

கால்டெக்ஸ் நிலையங்களில் ஒரு கிலோவாட் மின்சாரத்துக்கு 46.63 காசு கட்டணம் வசூலிக்கப்படும். ஷெல் நிலையத்தில் அதே அளவுக்கு 55 காசு வசூலிக்கப்படுகிறது.

செவ்ரோன் சிங்கப்பூர் நிறுவனமும் சிங்கப்பூர் பவர் நிறுவனமும் நேற்று வெளியிட்ட கூட்டறிக்கையில், பெட்ரோல் நிலையங்களில் மின்னூட்டு கூடங்களுக்காக வரவேற்பு, பயன்படுத்தும் நடைமுறைகள் ஆகியவற்றை ஆராய்ந்து, அதன் பிறகு இன்னும் பல கால்டெக்ஸ் பெட்ரோல் நிலையங்களில் அதிகமான மின்னூட்டுக் கூடங்களை ஏற்படுத்துவது பற்றி பரிசீலிப்போம் என்றும் தெரிவித்தன.

கால்டெக்ஸ் நிலையங்களில் மின்னூட்டுக் கூடங்கள் இவ்வாண்டு பிற்பாதியில் அமைக்கப்படும் என்றும் அருகில் உள்ள மின்னூட்டு வசதிகள் எங்குள்ளன போன்ற தகவல்கள் எஸ்பி நிறுவனத்தின் திறன்பேசிச் செயலியில் பதிவேற்றம் செய்யப்படும் என்றும் கூறப்பட்டது.